ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமழிசைப்பிரான் அருளிச்செய்த

# திருச்சந்தவிருத்தம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# திருச்சந்தவிருத்தம்

## தனியன்கள்

தருச்சந்தப் பொழில் தழுவு தாரணியின் துயர் தீர ⋆
திருச்சந்த விருத்தம் செய் திருமழிசைப் பரன் வரும் ஊர் ⋆
கருச்சந்தும் காரகிலும் கமழ் கோங்கும் மணநாறும் ⋆
திருச்சந்தத் துடன் மருவு திருமழிசை வளம் பதியே

உலகும் மழிசையும் உள் உணர்ந்து ⋆
தம்மில் புலவர் புகழ்க் கோலால் தூக்க ⋆
உலகு தன்னை வைத்தெடுத்த பக்கத்தும் ⋆
மாநீர் மழிசையே வைத்தெடுத்த பக்கம் வலிது

‡ பூ நிலாய ஐந்தும் ஆய்ப் ⋆
புனற்கண் நின்ற நான்கும் ஆய் ⋆
தீ நிலாய மூன்றும் ஆய்ச் ⋆
சிறந்த கால் இரண்டும் ஆய் ⋆
மீ நிலாயதொன்றும் ஆகி ⋆
வேறு வேறு தன்மை ஆய் ⋆
நீ நிலாய வண்ணம் நின்னை ⋆
யார் நினைக்க வல்லரே ‖ **1** ‖

ஆறும் ஆறும் ஆறும் ஆய் ⋆
ஓர் ஐந்தும் ஐந்தும் ஐந்தும் ஆய் ⋆
ஏறு சீர் இரண்டு மூன்றும் ⋆

ஏழும் ஆறும் எட்டும் ஆய் ⋆
வேறு வேறு ஞானம் ஆகி ⋆
மெய்யினொடு பொய்யும் ஆய் ⋆
ஊறொடோசை ஆய ஐந்தும் ⋆
ஆய ஆய மாயனே ! ‖ **2** ‖

ஐந்தும் ஐந்தும் ஐந்தும் ஆகி ⋆
அல்ல வற்றுளாயும் ஆய் ⋆
ஐந்து மூன்றும் ஒன்றும் ஆகி ⋆
நின்ற ஆதி தேவனே ⋆
ஐந்தும் ஐந்தும் ஐந்தும் ஆகி ⋆
அந்தரத்தணைந்து நின்று ⋆
ஐந்தும் ஐந்தும் ஆய நின்னை ⋆
யாவர் காண வல்லரே ‖ **3** ‖

மூன்று முப்பதாறினோடு ⋆
ஓர் ஐந்தும் ஐந்தும் ஐந்தும் ஆய் ⋆
மூன்று மூர்த்தி ஆகி மூன்று ⋆
மூன்று மூன்று மூன்றும் ஆய் ⋆
தோன்று சோதி மூன்றும் ஆய்த் ⋆
துளக்கம் இல் விளக்கமாய் ⋆
ஏன்றென் ஆவியுள் புகுந்தது ⋆
என் கொலோ எம் ஈசனே ! ‖ **4** ‖

நின்றியங்கும் ஒன்றலா ⋆
உருக்கள் தோறும் ஆவியாய் ⋆
ஒன்றி உள் கலந்து நின்ற ⋆
நின்ன தன்மை இன்னதென்று ⋆

என்றும் யார்க்கும் எண் இறந்த ⋆
ஆதியாய் ! நின் உந்திவாய் ⋆
அன்று நான்முகன் பயந்த ⋆
ஆதி தேவன் அல்லையே ‖ **5** ‖

நாகம் ஏந்து மேரு வெற்பை ⋆
நாகம் ஏந்து மண்ணினை ⋆
நாகம் ஏந்தும் ஆக மாக ⋆
மாகம் ஏந்து வார் புனல் ⋆
மாகம் ஏந்து மங்குல் தீ ஓர் ⋆
வாயு ஐந்தமைந்து காத்து ⋆
ஏகம் ஏந்தி நின்ற நீர்மை ⋆
நின்கணே இயன்றதே ‖ **6** ‖

ஒன்றிரண்டு மூர்த்தி ஆய் ⋆
உறக்கமோடுணர்ச்சி ஆய் ⋆
ஒன்றிரண்டு காலம் ஆகி ⋆
வேலை ஞாலம் ஆயினாய் ⋆
ஒன்றிரண்டு தீயும் ஆகி ⋆
ஆயன் ஆய மாயனே ⋆
ஒன்றிரண்டு கண்ணினானும் ⋆
உன்னை ஏத்த வல்லனே ‖ **7** ‖

ஆதி ஆன வானவர்க்கும் ⋆
அண்டம் ஆய அப்புறத்து ⋆
ஆதி ஆன வானவர்க்கும் ⋆
ஆதி ஆன ஆதி நீ ⋆
ஆதி ஆன வான வாணர் ⋆

அந்த காலம் நீ உரைத்தி ⋆
ஆதி ஆன காலம் நின்னை ⋆
யாவர் காண வல்லரே ॥ **8** ॥

தாதுலாவு கொன்றை மாலை ⋆
துன்னு செம் சடைச் சிவன் ⋆
நீதியால் வணங்கு பாத ! ⋆
நின்மலா ! நிலாய சீர் ⋆
வேதவாணர் கீத வேள்வி ⋆
நீதி ஆன கேள்வியார் ⋆
நீதியால் வணங்குகின்ற ⋆
நீர்மை நின்கண் நின்றதே ॥ **9** ॥

தன்னுளே திரைத்தெழும் ⋆
தரங்க வெண் தடம் கடல் ⋆
தன்னுளே திரைத்தெழுந்து ⋆
அடங்குகின்ற தன்மை போல் ⋆
நின்னுளே பிறந்திறந்து ⋆
நிற்பவும் திரிபவும் ⋆
நின்னுளே அடங்குகின்ற ⋆
நீர்மை நின்கண் நின்றதே ॥ **10** ॥

சொல்லினால் தொடர்ச்சி நீ ⋆
சொலப்படும் பொருளும் நீ ⋆
சொல்லினால் சொலப்படாது ⋆
தோன்றுகின்ற சோதி நீ ⋆
சொல்லினால் படைக்க ⋆
நீ படைக்க வந்து தோன்றினார் ⋆

சொல்லினால் சுருங்க ⋆
நின் குணங்கள் சொல்ல வல்லரே ‖ **11** ‖

உலகு தன்னை நீ படைத்தி ⋆
உள் ஒடுக்கி வைத்தி ⋆
மீண்டுலகு தன்னுளே பிறத்தி ⋆
ஓர் இடத்தை அல்லையால் ⋆
உலகு நின்னொடொன்றி நிற்க ⋆
வேறு நிற்றி ஆதலால் ⋆
உலகில் நின்னை உள்ள சூழல் ⋆
யாவர் உள்ள வல்லரே ‖ **12** ‖

இன்னை என்று சொல்லல் ஆவது ⋆
இல்லை யாதும் இட்டிடைப் ⋆
பின்னை கேள்வன் என்பர் ⋆
உன் பிணக்குணர்ந்த பெற்றியோர் ⋆
பின்னை ஆய கோலமோடு ⋆
பேரும் ஊரும் ஆதியும் ⋆
நின்னையார் நினைக்க வல்லர் ⋆
நீர்மையால் நினைக்கிலே ! ‖ **13** ‖

தூய்மை யோகம் ஆயினாய் ⋆
துழாய் அலங்கல் மாலையாய் ⋆
ஆமை ஆகி ஆழ் கடல் துயின்ற ⋆
ஆதி தேவ ⋆
நின் நாமதேயம் இன்னதென்ன ⋆
வல்லம் அல்லம் ஆகிலும் ⋆

சாம வேத கீதனாய ⋆
சக்ரபாணி அல்லையே ॥ **14** ॥

அங்கம் ஆறும் வேத நான்கும் ⋆
ஆகி நின்றவற்றுளே ⋆
தங்குகின்ற தன்மையாய் ! ⋆
தடங்கடல் பணத்தலை ⋆
செங்கண் நாகணைக் கிடந்த ⋆
செல்வ மல்கு சீரினாய் ⋆
சங்க வண்ணம் அன்ன மேனி ⋆
சார்ங்கபாணி அல்லையே ॥ **15** ॥

தலைக் கணத்துகள் குழம்பு ⋆
சாதி சோதி தோற்றமாய் ⋆
நிலைக் கணங்கள் காண வந்து ⋆
நிற்றி ஏலும் நீடிரும் ⋆
கலைக் கணங்கள் சொற்பொருள் ⋆
கருத்தினால் நினைக்கொணா ⋆
மலைக் கணங்கள் போல் உணர்த்தும் ⋆
மாட்சி நின்றன் மாட்சியே ॥ **16** ॥

ஏக மூர்த்தி மூன்று மூர்த்தி ⋆
நாலு மூர்த்தி நன்மை சேர் ⋆
போக மூர்த்தி புண்ணியத்தின் மூர்த்தி ⋆
எண் இல் மூர்த்தி ஆய் ⋆
நாக மூர்த்தி சயனம் ஆய் ⋆
நலம் கடல் கிடந்து ⋆

மேல் ஆக மூர்த்தி ஆய வண்ணம் ⋆
என் கொல் ஆதி தேவனே ! ‖ **17** ‖

விடத்த வாய் ஓர் ஆயிரம் ⋆
இராயிரம் கண் வெந்தழல் ⋆
விடத்து வீழ்விலாத போகம் ⋆
மிக்க சோதி தொக்க சீர் ⋆
தொடுத்து மேல் விதானம் ஆய ⋆
பௌவநீர் அரா அணை ⋆
படுத்த பாயல் பள்ளி கொள்வது ⋆
என் கொல் வேலை வண்ணனே ! ‖ **18** ‖

புள் அதாகி வேதம் நான்கும் ⋆
ஓதினாய் அதன்றியும் ⋆
புள்ளின் வாய் பிளந்து ⋆
புட்கொடிப் பிடித்த பின்னரும் ⋆
புள்ளை ஊர்தி ஆதலால் ⋆
அதென் கொல் மின் கொள் நேமியாய் ! ⋆
புள்ளின் மெய்ப் பகைக் கடல் கிடத்தல் ⋆
காதலித்ததே ‖ **19** ‖

கூசம் ஒன்றும் இன்றி ⋆
மாசுணம் படுத்து வேலை நீர் ⋆
பேச நின்ற தேவர் வந்து ⋆
பாட முன் கிடந்ததும் ⋆
பாசம் நின்ற நீரில் வாழும் ⋆
ஆமையான கேசவா ⋆

ஏச அன்று நீ கிடந்தவாறு ⋆
கூறு தேறவே ॥ **20** ॥

அரங்கனே ! தரங்கநீர் ⋆
கலங்க அன்று குன்று சூழ் ⋆
மரங்கள் தேய மாநிலம் குலுங்க ⋆
மாசுணம் சுலாய் ⋆
நெருங்கநீ கடைந்த போது ⋆
நின்ற சூரர் என் செய்தார் ⋆
குரங்கை ஆள் உகந்த எந்தை ! ⋆
கூறு தேற வேறிதே ॥ **21** ॥

பண்டும் இன்றும் மேலும் ஆய் ⋆
ஓர் பாலன் ஆகி ஞாலம் ஏழும் ⋆
உண்டு மண்டி ஆல் இலைத் துயின்ற ⋆
ஆதி தேவனே ! ⋆
வண்டு கிண்டு தண் துழாய் ⋆
அலங்கலாய் ! கலந்த சீர்ப் ⋆
புண்டரீக பாவை சேரும் ⋆
மார்ப ! பூமி நாதனே ! ॥ **22** ॥

வால் நிறத்தொர் சீயம் ஆய் ⋆
வளைந்த வாள் எயிற்றவன் ⋆
ஊன் நிறத்துகிர்த்தலம் ⋆
அழுத்தினாய் ! உலாய சீர் ⋆
நால் நிறத்த வேதநாவர் ⋆
நல்ல யோகினால் வணங்கு ⋆

பால் நிறக் கடல் கிடந்த ⋆
பற்பநாபன் அல்லையே ॥ **23** ॥

கங்கை நீர் பயந்த பாத ⋆
பங்கயத்தெம் அண்ணலே ⋆
அங்கை ஆழி சங்கு தண்டு ⋆
வில்லும் வாளும் ஏந்தினாய் ⋆
சிங்கம் ஆய தேவ தேவ ! ⋆
தேன் உலாவு மென் மலர் ⋆
மங்கை மன்னி வாழு மார்ப ! ⋆
ஆழி மேனி மாயனே ! ॥ **24** ॥

வரத்தினில் சிரத்தை மிக்க ⋆
வாள் எயிற்று மற்றவன் ⋆
உரத்தினில் கரத்தை வைத்து ⋆
உகிர்த்தலத்தை ஊன்றினாய் ⋆
இரத்தி நீ இதென்ன பொய் ⋆
இரந்த மண் வயிற்றுளே கரத்தி ⋆
உன் கருத்தை ⋆
யாவர் காண வல்லர் கண்ணனே ! ॥ **25** ॥

ஆணினோடு பெண்ணும் ஆகி ⋆
அல்லவோடு நல்லவாய் ⋆
ஊனொடோசை ஊறும் ஆகி ⋆
ஒன்றலாத மாயை ஆய் ⋆
பூணி பேணும் ஆயன் ஆகிப் ⋆
பொய்யினோடு மெய்யும் ஆய் ⋆

காணி பேணும் மாணி ஆய்க் ⋆
கரந்து சென்ற கள்வனே ! ॥ **26** ॥

விண் கடந்த சோதியாய் ⋆
விளங்கு ஞான மூர்த்தியாய் ⋆
பண் கடந்த தேச மேவு ⋆
பாவநாச நாதனே ⋆
எண் கடந்த யோகினோடு ⋆
இரந்து சென்று மாணி ஆய் ⋆
மண் கடந்த வண்ணம் நின்னை ⋆
யார் மதிக்க வல்லரே ॥ **27** ॥

படைத்த பார் இடந்தளந்து ⋆
அதுண்டுமிழ்ந்து பௌவநீர் ⋆
படைத்தடைத்ததிற் கிடந்து ⋆
முன் கடைந்த பெற்றியோய் ⋆
மிடைத்த மாலி மாலிமான் ⋆
விலங்கு காலன் ஊர் புகப் ⋆
படைக்கலம் விடுத்த ⋆
பல் படைத் தடக்கை மாயனே ! ॥ **28** ॥

பரத்திலும் பரத்தை ஆதி ⋆
பௌவநீர் அணைக் கிடந்து ⋆
உரத்திலும் ஒருத்தி தன்னை ⋆
வைத்துகந்ததன்றியும் ⋆
நரத்திலும் பிறத்தி ⋆
நாத ஞான மூர்த்தி ஆயினாய் ⋆

ஒருத்தரும் நினாது தன்மை ⋆
இன்னதென்ன வல்லரே ॥ **29** ॥

வானகமும் மண்ணகமும் ⋆
வெற்பும் ஏழ் கடல்களும் ⋆
போனகம் செய்தாலிலைத் துயின்ற ⋆
புண்டரீகனே ⋆
தேன் அகம் செய் தண் நறும் ⋆
மலர்த்துழாய் நன் மாலையாய் ⋆
கூன் அகம் புகத்தெறித்த ⋆
கொற்ற வில்லி அல்லையே ॥ **30** ॥

காலநேமி காலனே ! ⋆
கணக்கிலாத கீர்த்தியாய் ⋆
ஞாலம் ஏழும் உண்டு ⋆
பண்டோர் பாலனாய பண்பனே ⋆
வேலைவேவ வில் வளைத்த ⋆
வெல் சினத்த வீர ⋆
நின் பாலராய பத்தர் சித்தம் ⋆
முத்தி செய்யும் மூர்த்தியே ! ॥ **31** ॥

குரக்கினப் படை கொடு ⋆
குரை கடலின் மீது போய் ⋆
அரக்கர் அங்கரங்க ⋆
வெம் சரம் துரந்த ஆதி நீ ⋆
இரக்க மண் கொடுத்தவற்கு ⋆
இருக்கம் ஒன்றும் இன்றியே ⋆

பரக்க வைத்தளந்து கொண்ட ⋆
பற்ப பாதன் அல்லையே ‖ **32** ‖

மின் நிறத்த எயிற்றரக்கன் வீழ ⋆
வெம் சரம் துரந்து ⋆
பின்னவற்கருள் புரிந்து ⋆
அரசளித்த பெற்றியோய் ⋆
நன்னிறத்தொர் இன் சொல் ஏழை ⋆
பின்னை கேள்வ ! மன்னு சீர் ⋆
பொன் நிறத்த வண்ணன் ஆய ⋆
புண்டரீகன் அல்லையே ‖ **33** ‖

ஆதி ஆதி ஆதி நீ ⋆
ஒர் அண்டம் ஆதி ஆதலால் ⋆
சோதியாத சோதி நீ ⋆
அதுண்மையில் விளங்கினாய் ⋆
வேதம் ஆகி வேள்வி ஆகி ⋆
விண்ணினோடு மண்ணும் ஆய் ⋆
ஆதி ஆகி ஆயன் ஆய ⋆
மாயம் என்ன மாயமே ‖ **34** ‖

அம்புலாவு மீனும் ஆகி ⋆
ஆமை ஆகி ஆழியார் ⋆
தம் பிரானும் ஆகி மிக்கது ⋆
அன்பு மிக்கதன்றியும் ⋆
கொம்பராவு நுண் மருங்குல் ⋆
ஆயர் மாதர் பிள்ளையாய் ⋆

எம்பிரானும் ஆய வண்ணம் ⋆
என் கொலோ எம் ஈசனே ! ‖ **35** ‖

ஆடகத்த பூண் முலை ⋆
யசோதை ஆய்ச்சி பிள்ளையாய் ⋆
சாடுதைத்தோர் புள்ளதாவி ⋆
கள்ள தாய பேய்மகள் ⋆
வீட வைத்த வெய்ய கொங்கை ⋆
ஐய பால் அமுது செய்து ⋆
ஆடகக் கை மாதர் வாய் அமுதம் ⋆
உண்டதென் கொலோ ‖ **36** ‖

காய்த்த நீள் விளங்கனி உதிர்த்து ⋆
எதிர்ந்த பூங்குருந்தம் சாய்த்து ⋆
மா பிளந்த கைத்தலத்த ⋆
கண்ணன் என்பரால் ⋆
ஆய்ச்சி பாலை உண்டு மண்ணை உண்டு ⋆
வெண்ணெய் உண்டு ⋆
பின் பேய்ச்சி பாலை உண்டு ⋆
பண்டோர் ஏனம் ஆய வாமனா ! ‖ **37** ‖

கடம் கலந்த வன் கரி ⋆
மருப்பொசித்தோர் பொய்கைவாய் ⋆
விடம் கலந்த பாம்பின் மேல் ⋆
நடம் பயின்ற நாதனே ⋆
குடம் கலந்த கூத்தன் ஆய ⋆
கொண்டல் வண்ண ! தண் துழாய் ⋆

வடம் கலந்த மாலை மார்ப !⋆
காலநேமி காலனே ! ‖ **38** ‖

வெற்பெடுத்து வேலை நீர்⋆
கலக்கினாய் அதன்றியும்⋆
வெற்பெடுத்து வேலை நீர்⋆
வரம்பு கட்டி வேலை சூழ்⋆
வெற்பெடுத்த இஞ்சி சூழ்⋆
இலங்கை கட்டழித்த நீ⋆
வெற்பெடுத்து மாரி காத்த⋆
மேக வண்ணன் அல்லையே ! ‖ **39** ‖

ஆனை காத்தோர் ஆனை கொன்று⋆
அதன்றி ஆயர் பிள்ளையாய்⋆
ஆனை மேய்த்தி ஆனை உண்டி⋆
அன்று குன்றம் ஒன்றினால்⋆
ஆனை காத்து மை அரிக் கண்⋆
மாதர் ஆர் திறத்து⋆
முன் ஆனை அன்று சென்றடர்த்த⋆
மாயம் என்ன மாயமே ‖ **40** ‖

ஆயன் ஆகி ஆயர் மங்கை⋆
வேய தோள் விரும்பினாய்⋆
ஆய ! நின்னை யாவர் வல்லர்⋆
அம்பரத்தொடிம்பராய்⋆
மாய ! மாய மாயை கொல்⋆
அதன்றி நீ வகுத்தலும்⋆

மாய மாயம் ஆக்கினாய் ⋆
உன் மாய முற்றும் மாயமே ॥ **41** ॥

வேறிசைந்த செக்கர் மேனி ⋆
நீரணிந்த புன் சடைக் ⋆
கீறு திங்கள் வைத்தவன் ⋆
கை வைத்த வன் கபால் மிசை ⋆
ஊறு செம் குருதியால் ⋆
நிறைத்த காரணம் தனை ⋆
ஏறு சென்றடர்த்த ஈச ! ⋆
பேசு கூசம் இன்றியே ॥ **42** ॥

வெம் சினத்த வேழவெண் ⋆
மருப்பொசித்துருத்தமா ⋆
கஞ்சனைக் கடிந்து ⋆
மண் அளந்து கொண்ட காலனே ⋆
வஞ்சனத்து வந்த பேய்ச்சி ⋆
ஆவி பாலுள் வாங்கினாய் ⋆
அஞ்சனத்த வண்ணனாய ⋆
ஆதி தேவன் அல்லையே ॥ **43** ॥

பாலின் நீர்மை செம் பொன் நீர்மை ⋆
பாசியின் பசும் புறம் ⋆
போலும் நீர்மை பொற்புடைத் தடத்து ⋆
வண்டு விண்டுலாம் ⋆
நீல நீர்மை என்றிவை ⋆
நிறைந்த காலம் நான்குமாய் ⋆

மாலின் நீர்மை வையகம் ⋆
மறைத்ததென்ன நீர்மையே ॥ **44** ॥

மண் உளாய் கொல் விண் உளாய் கொல் ⋆
மண்ணுளே மயங்கி நின்று ⋆
எண்ணும் எண் அகப்படாய் கொல் ⋆
என்ன மாயை ⋆
நின் தமர் கண் உளாய் கொல் சேயை கொல் ⋆
அனந்தன் மேல் கிடந்த எம் புண்ணியா ⋆
புனம் துழாய் ⋆
அலங்கல் அம் புனிதனே ! ॥ **45** ॥

தோடு பெற்ற தண் துழாய் ⋆
அலங்கல் ஆடு சென்னியாய் ⋆
கோடு பற்றி ஆழி ஏந்தி ⋆
அம் சிறைப் புள் ஊர்தியால் ⋆
நாடு பெற்ற நன்மை ⋆
நண்ணம் இல்லை யேனும் நாயினேன் ⋆
வீடு பெற்றிறப்பொடும் ⋆
பிறப்பறுக்குமா சொலே ॥ **46** ॥

காரொடொத்த மேனி நங்கள் ⋆
கண்ண ! விண்ணின் நாதனே ⋆
நீர் இடத்தரா அணைக் கிடத்தி ⋆
என்பர் அன்றியும் ⋆
ஓர் இடத்தை அல்லை ⋆
எல்லை இல்லை என்பர் ஆதலால் ⋆

சேர்விடத்தை நாயினேன் ⋆
தெரிந்திறைஞ்சுமா சொலே ॥ **47** ॥

குன்றில் நின்று வான் இருந்து ⋆
நீள் கடல் கிடந்து ⋆
மண் ஒன்று சென்ற தொன்றை உண்டு ⋆
அதொன்றிடந்து பன்றி ஆய் ⋆
நன்று சென்ற நாள் அவற்றுள் ⋆
நல் உயிர் படைத்தவர்க்கு ⋆
அன்று தேவ மைத்தளித்த ⋆
ஆதி தேவன் அல்லையே ॥ **48** ॥

‡ கொண்டை கொண்ட கோதை மீது ⋆
தேன் உலாவு கூனி கூன் ⋆
உண்டை கொண்டரங்க ஓட்டி ⋆
உள் மகிழ்ந்த நாதன் ஊர் ⋆
நண்டை உண்டு நாரை பேர ⋆
வாளை பாய நீலமே ⋆
அண்டை கொண்டு கெண்டை மேயும் ⋆
அந்தணீர் அரங்கமே ॥ **49** ॥

வெண் திரைக் கருங்கடல் ⋆
சிவந்து வேவ முன் ஓர் நாள் ⋆
திண் திறல் சிலைக்கை வாளி ⋆
விட்ட வீரர் சேரும் ஊர் ⋆
எண் திசைக் கணங்களும் ⋆
இறைஞ்சி ஆடு தீர்த்த நீர் ⋆

வண்டிரைத்த சோலை வேலி ⋆
மன்னு சீர் அரங்கமே ॥ **50** ॥

சரங்களைத் துரந்து ⋆
வில் வளைத்திலங்கை மன்னவன் ⋆
சிரங்கள் பத்தறுத்துதிர்த்த ⋆
செல்வர் மன்னு பொன் இடம் ⋆
பரந்து பொன் நிரந்து நுந்தி ⋆
வந்தலைக்கும் வார் புனல் ⋆
அரங்கம் என்பர் ⋆
நான் முகத்தயன் பணிந்த கோயிலே ॥ **51** ॥

பொற்றை உற்ற முற்றல் யானை ⋆
போர் எதிர்ந்து வந்ததை ⋆
பற்றி உற்று மற்றதன் ⋆
மருப்பொசித்த பாகன் ஊர் ⋆
சிற்றெயிற்று முற்றல் மூங்கில் ⋆
மூன்று தண்டர் ஒன்றினர் ⋆
அற்ற பற்றர் சுற்றி வாழும் ⋆
அந்தணீர் அரங்கமே ॥ **52** ॥

மோடியோடிலச்சை ஆய ⋆
சாபம் எய்தி முக்கணான் ⋆
கூடு சேனை மக்களோடு ⋆
கொண்டு மண்டி வெஞ்சமத்தோட ⋆
வாணன் ஆயிரம் கரம் கழித்த ⋆
ஆதி மால் ⋆

பீடு கோயில் கூடு நீர் ⋆
அரங்கம் என்ற பேரதே ‖ **53** ‖

இலைத்தலைச் சரம் துரந்து ⋆
இலங்கை கட்டழித்தவன் ⋆
மலைத்தலைப் பிறந்திழிந்து ⋆
வந்து நுந்து சந்தனம் ⋆
குலைத்தலைத்திறுத்தெறிந்த ⋆
குங்குமக் குழம்பினோடு ⋆
அலைத்தொழுகு காவிரி ⋆
அரங்கமேய அண்ணலே ‖ **54** ‖

மன்னு மா மலர்க் கிழத்தி ⋆
வைய மங்கை மைந்தனாய் ⋆
பின்னும் ஆயர் பின்னை தோள் ⋆
மணம் புணர்ந்ததன்றியும் ⋆
உன்ன பாதம் என்ன சிந்தை ⋆
மன்ன வைத்து நல்கினாய் ⋆
பொன்னி சூழ் அரங்கமேய ⋆
புண்டரீகன் அல்லையே ‖ **55** ‖

இலங்கை மன்னன் ஐந்தொடைந்து ⋆
பைந்தலை நிலத்துக ⋆
கலங்க அன்று சென்று கொன்று ⋆
வென்றி கொண்ட வீரனே ⋆
விலங்கு நூலர் வேத நாவர் ⋆
நீதியான கேள்வியார் ⋆

வலம் கொளக் குடந்தையுள் ⋆
கிடந்த மாலும் அல்லையே ॥ **56** ॥

சங்கு தங்கு முன்கை நங்கை ⋆
கொங்கை தங்கல் உற்றவன் ⋆
அங்கம் மங்க அன்று சென்று ⋆
அடர்த்தெறிந்த ஆழியான் ⋆
கொங்கு தங்கு வார் குழல் ⋆
மடந்தைமார் குடைந்த நீர் ⋆
பொங்கு தண் குடந்தையுள் ⋆
கிடந்த புண்டரீகனே ! ॥ **57** ॥

மரம் கெட நடந்தடர்த்து ⋆
மத்த யானை மத்தகத்து ⋆
உரம் கெடப் புடைத்து ⋆
ஓர் கொம்பொசித்துகந்த உத்தமா ⋆
துரங்கம் வாய் பிளந்து ⋆
மண் அளந்த பாத ⋆
வேதியர் வரம் கொளக் குடந்தையுள் ⋆
கிடந்த மாலும் அல்லையே ॥ **58** ॥

சாலி வேலி தண் வயல் ⋆
தடம் கிடங்கு பூம் பொழில் ⋆
கோல மாடநீடு ⋆
தண் குடந்தை மேய கோவலா ⋆
காலநேமி வக்கரன் ⋆
கரன் முரன் சிரம் அவை ⋆

காலனோடு கூட ⋆
விற் குனித்த விற் கை வீரனே ! ‖ **59** ‖

‡ செழும் கொழும் பெரும்பனி ⋆
பொழிந்திட ⋆
உயர்ந்த வேய் விழுந்துலர்ந்தெழுந்து ⋆
விண் புடைக்கும் வேங்கடத்துள் நின்று ⋆
எழுந்திருந்து தேன் பொருந்து ⋆
பூம்பொழில் தழைக் கொழும் ⋆
செழும் தடம் குடந்தையுள் ⋆
கிடந்த மாலும் அல்லையே ‖ **60** ‖

‡ நடந்த கால்கள் நொந்தவோ ⋆
நடுங்க ஞாலம் ஏனமாய் ⋆
இடந்த மெய் குலுங்கவோ ⋆
விலங்கு மால் வரைச் சுரம் ⋆
கடந்த கால் பரந்த ⋆
காவிரிக் கரைக் குடந்தையுள் ⋆
கிடந்தவாறெழுந்திருந்து பேசு ⋆
வாழி கேசனே ! ‖ **61** ‖

‡ கரண்டம் ஆடு பொய்கையுள் ⋆
கரும்பனைப் பெரும் பழம் ⋆
புரண்டு வீழ வாளை பாய் ⋆
குறுங்குடி நெடுந்தகாய் ⋆
திரண்ட தோள் இரணியன் ⋆
சினம் கொள் ஆகம் ஒன்றையும் ⋆

இரண்டு கூறு செய்துகந்த ⋆
சிங்கம் என்பதுன்னையே ॥ **62** ॥

நன்றிருந்து யோக நீதி ⋆
நண்ணுவார்கள் சிந்தையுள் ⋆
சென்றிருந்து தீ வினைகள் ⋆
தீர்த்த தேவ தேவனே ⋆
குன்றிருந்த மாட நீடு ⋆
பாடகத்தும் ஊரகத்தும் ⋆
நின்றிருந்து வெஃகணைக் கிடந்தது ⋆
என்ன நீர்மையே ॥ **63** ॥

நின்றதெந்தை ஊரகத்து ⋆
இருந்ததெந்தை பாடகத்து ⋆
அன்று வெஃகணைக் கிடந்தது ⋆
என் இலாத முன்னெலாம் ⋆
அன்று நான் பிறந்திலேன் ⋆
பிறந்த பின் மறந்திலேன் ⋆
நின்றதும் இருந்ததும் ⋆
கிடந்ததும் என் நெஞ்சுளே ॥ **64** ॥

நிற்பதும் ஓர் வெற்பகத்து ⋆
இருப்பும் விண் கிடப்பதும் ⋆
நற் பெருந் திரைக் கடலுள் ⋆
நான் இலாத முன்னெலாம் ⋆
அற்புதன் அனந்த சயனன் ⋆
ஆதிபூதன் மாதவன் ⋆

நிற்பதும் இருப்பதும் ⋆
கிடப்பதும் என் நெஞ்சுளே ‖ **65** ‖

இன்று சாதல் நின்று சாதல் ⋆
அன்றி யாரும் வையகத்து ⋆
ஒன்றி நின்று வாழ்தல் இன்மை கண்டும் ⋆
நீசர் என் கொலோ ⋆
அன்று பார் அளந்த பாத போதை ⋆
ஒன்றி வானின்மேல் ⋆
சென்று சென்று தேவராய் ⋆
இருக்கிலாத வண்ணமே ‖ **66** ‖

சண்ட மண்டலத்தின் ஊடு ⋆
சென்று வீடு பெற்று ⋆
மேல் கண்டு வீடிலாத காதல் ⋆
இன்பம் நாளும் எய்துவீர் ⋆
புண்டரீக பாத புண்ய கீர்த்தி ⋆
நும் செவி மடுத்துண்டு ⋆
நும் உறு வினைத் ⋆
துயருள் நீங்கி உய்ம்மினோ ‖ **67** ‖

முத்திறத்து வாணியத்து ⋆
இரண்டில் ஒன்றும் நீசர்கள் ⋆
மத்தராய் மயங்குகின்றது ⋆
இட்டதில் இறந்து போந்து ⋆
எத்திறத்தும் உய்வதோர் ⋆
உபாயம் இல்லை உய்குறில் ⋆

தொத்திறுத்த தண் துழாய் ⋆
நன் மாலை வாழ்த்தி வாழ்மினோ ॥ **68** ॥

காணிலும் உருப் பொலார் ⋆
செவிக்கினாத கீர்த்தியார் ⋆
பேணிலும் வரம் தர ⋆
மிடுக்கிலாத தேவரை ⋆
ஆணம் என்றடைந்து வாழும் ⋆
ஆதர்காள் ! எம் ஆதி பால் ⋆
பேணி நும் பிறப்பெனும் ⋆
பிணக்கறுக்க கிற்றிரே ॥ **69** ॥

குந்தமோடு சூலம் வேல்கள் ⋆
தோமரங்கள் தண்டு வாள் ⋆
பந்தமான தேவர்கள் ⋆
பரந்து வானகம் உற ⋆
வந்த வாணன் ஈர் ஐஞ்ஞூறு ⋆
தோள்களைத் துணித்த நாள் ⋆
அந்த அந்த ஆகுலம் ⋆
அமரரே அறிவரே ॥ **70** ॥

வண்டுலாவு கோதை மாதர் ⋆
காரணத்தினால் வெகுண்டு ⋆
இண்ட வாணன் ஈர் ஐஞ்ஞூறு ⋆
தோள்களைத் துணித்த நாள் ⋆
முண்டன் நீறன் மக்கள் வெப்பு ⋆
மோடியங்கி ஓடிடக் கண்டு ⋆

நாணி வாணனுக்கிரங்கினான் ⋆
எம் மாயனே ॥ **71** ॥

போதில் மங்கை பூதலக் ⋆
கிழத்தி தேவி அன்றியும் ⋆
போதுதங்கு நான்முகன் மகன் ⋆
அவன் மகன் சொலில் ⋆
மாதுதங்கு கூறன் ⋆
ஏறதூர்தி என்று வேத நூல் ⋆
ஓதுகின்றதுண்மை ⋆
அல்லதில்லை மற்றுரைக்கிலே ॥ **72** ॥

மரம் பொதச் சரம் துரந்து ⋆
வாலி வீழ முன் ஓர் நாள் ⋆
உரம் பொதச் சரம் துரந்த ⋆
உம்பர் ஆளி எம்பிரான் ⋆
வரம் குறிப்பில் வைத்தவர்க்கு ⋆
அலாது வானம் ஆளிலும் ⋆
நிரம்பு நீடு போகம் ⋆
எத்திறத்தும் யார்க்கும் இல்லையே ॥ **73** ॥

அறிந்தறிந்து வாமனன் ⋆
அடி இணை வணங்கினால் ⋆
செறிந்தெழுந்த ஞானமோடு ⋆
செல்வமும் சிறந்திடும் ⋆
மறிந்தெழுந்த தெண் திரையுள் ⋆
மன்னு மாலை வாழ்த்தினால் ⋆

பறிந்தெழுந்து தீ வினைகள் ⋆
பற்றறுதல் பான்மையே ॥ **74** ॥

ஒன்றி நின்று நற்றவம் செய்து ⋆
ஊழி ஊழிதோறெலாம் ⋆
நின்று நின்றவன் குணங்கள் ⋆
உள்ளி உள்ளம் தூயராய் ⋆
சென்று சென்று தேவ தேவர் ⋆
உம்பர் உம்பர் உம்பர் ஆய் ⋆
அன்றி எங்கள் செங்கண் மாலை ⋆
யாவர் காண வல்லரே ॥ **75** ॥

புன்புல வழி அடைத்து ⋆
அரக்கிலச்சினை செய்து ⋆
நன்புல வழி திறந்து ⋆
ஞான நற்சுடர் கொளீ இ ⋆
என்பில் எள்கி நெஞ்சுருகி ⋆
உள் கனிந்தெழுந்ததோர் ⋆
அன்பில் அன்றி ஆழியானை ⋆
யாவர் காண வல்லரே ॥ **76** ॥

எட்டும் எட்டும் எட்டும் ஆய் ⋆
ஓர் ஏழும் ஏழும் ஏழும் ஆய் ⋆
எட்டு மூன்றும் ஒன்றும் ஆகி ⋆
நின்ற ஆதி தேவனை ⋆
எட்டின் ஆய பேதமோடு ⋆
இறைஞ்சி நின்றவன் பெயர் ⋆

எட்டெழுத்தும் ஓதுவார்கள் ⋆
வல்லர் வானம் ஆளவே ‖ **77** ‖

சோர்விலாத காதலால் ⋆
தொடக்கறா மனத்தராய் ⋆
நீர் அரா அணைக் கிடந்த ⋆
நின்மலன் நலம் கழல் ⋆
ஆர்வமோடிறைஞ்சி நின்று ⋆
அவன் பெயர் எட்டெழுத்தும் ⋆
வாரம் ஆக ஓதுவார்கள் ⋆
வல்லர் வானம் ஆளவே ‖ **78** ‖

பத்தினோடு பத்தும் ஆய் ⋆
ஓர் ஏழினோடொர் ஒன்பதாய் ⋆
பத்தினால் திசைக் கண் நின்ற ⋆
நாடு பெற்ற நன்மையாய் ⋆
பத்தின் ஆய தோற்றமோடு ⋆
ஓர் ஆற்றல் மிக்க ஆதி பால் ⋆
பத்தராம் அவர்க்கலாது ⋆
முத்தி முற்றல் ஆகுமே ‖ **79** ‖

வாசி ஆகி நேசம் இன்றி ⋆
வந்தெதிர்ந்த தேனுகன் ⋆
நாசம் ஆகி நாள் உலப்ப ⋆
நன்மை சேர் பனங்கனிக்கு ⋆
வீசி மேல் நிமிர்ந்த தோளில் ⋆
இல்லை ஆக்கினாய் ⋆

கழற்கு ஆசை ஆம் அவர்க்கலால் ⋆
அமரர் ஆகல் ஆகுமே ‖ **80** ‖

கடைந்து பாற்கடல் கிடந்து ⋆
காலநேமியைக் கடிந்து ⋆
உடைந்த வாலி தன் தனக்கு ⋆
உதவ வந்திராமனாய் ⋆
மிடைந்த ஏழ் மரங்களும் ⋆
அடங்க எய்து ⋆
வேங்கடம் அடைந்த மால பாதமே ⋆
அடைந்து நாளும் உய்ம்மினோ ‖ **81** ‖

எத்திறத்தும் ஒத்து நின்று ⋆
உயர்ந்துயர்ந்த பெற்றியோய் ⋆
முத்திறத்து மூரி நீர் ⋆
அராவணைத் துயின்ற ⋆
நின் பத்துறுத்த சிந்தையோடு ⋆
நின்று பாசம் விட்டவர்க்கு ⋆
எத்திறத்தும் இன்பம் ⋆
இங்கும் அங்கும் எங்கும் ஆகுமே ‖ **82** ‖

மட்டுலாவு தண் துழாய் ⋆
அலங்கலாய் ! புலன் கழல் ⋆
விட்டு வீள்விலாத போகம் ⋆
விண்ணில் நண்ணி ஏறினும் ⋆
எட்டினோடிரண்டெனும் ⋆
கயிற்றினால் மனந்தனைக் கட்டி ⋆

வீடிலாது வைத்த ⋆
காதல் இன்பம் ஆகுமே ॥ **83** ॥

பின் பிறக்க வைத்தனன் கொல் ⋆
அன்றி நின்று தன் கழற்கு ⋆
அன்புறைக்க வைத்த நாள் ⋆
அறிந்தனன் கொல் ஆழியான் ⋆
தன் திறத்தொர் அன்பிலா ⋆
அறிவிலாத நாயினேன் ⋆
என் திறத்தில் என் கொல் ⋆
எம்பிரான் குறிப்பில் வைத்ததே ॥ **84** ॥

நச்சரா அணைக் கிடந்த ⋆
நாத ! பாத போதினில் ⋆
வைத்த சிந்தை வாங்குவித்து ⋆
நீங்குவிக்க நீ இனம் ⋆
மெய்த்தன் வல்லை ஆதலால் ⋆
அறிந்தனன் நின் மாயமே ⋆
உய்த்து நின் மயக்கினில் ⋆
மயக்கல் என்னை மாயனே ! ॥ **85** ॥

சாடு சாடு பாதனே ! ⋆
சலம் கலந்த பொய்கை வாய் ⋆
ஆடராவின் வன் பிடர் ⋆
நடம் பயின்ற நாதனே ⋆
கோடு நீடு கைய ! ⋆
செய்ய பாத நாளும் உள்ளினால் ⋆

வீடனாக மெய்செயாத ⋆
வண்ணம் என் கொல் கண்ணனே ! ‖ **86** ‖

நெற்றி பெற்ற கண்ணன் ⋆
விண்ணின் நாதனோடு போதின் மேல் ⋆
நற்றவத்து நாதனோடு ⋆
மற்றும் உள்ள வானவர் ⋆
கற்ற பெற்றியால் வணங்கு பாத ! ⋆
நாத ! வேத ⋆
நின் பற்றலால் ஓர் பற்று ⋆
மற்றதுற்றிலேன் உரைக்கிலே ‖ **87** ‖

வெள்ளை வேலை வெற்பு நாட்டி ⋆
வெள் எயிற்றரா அளாய் ⋆
அள்ளலாக் கடைந்த அன்று ⋆
அரு வரைக்கொர் ஆமையாய் ⋆
உள்ள நோய்கள் தீர் மருந்து ⋆
வானவர்க்களித்த ⋆
எம் வள்ளலாரை அன்றி ⋆
மற்றோர் தெய்வம் நான் மதிப்பனே ‖ **88** ‖

பார் மிகுத்த பாரம் ⋆
முன் ஒழிச்சுவான் அருச்சுனன் ⋆
தேர் மிகுத்து மாயம் ஆக்கி ⋆
நின்று கொன்று வென்றி சேர் ⋆
மாரதர்க்கு வான் கொடுத்து ⋆
வையம் ஐவர் பாலதாம் ⋆

சீர் மிகுத்த நின் அலால் ⋆
ஓர் தெய்வம் நான் மதிப்பனே ‖ **89** ‖

குலங்கள் ஆய ஈர் இரண்டில் ⋆
ஒன்றிலும் பிறந்திலேன் ⋆
நலங்கள் ஆய நற்கலைகள் ⋆
நாவிலும் நவின்றிலேன் ⋆
புலன்கள் ஐந்தும் வென்றிலேன் ⋆
பொறியிலேன் புனித ⋆
நின் இலங்கு பாதம் அன்றி ⋆
மற்றோர் பற்றிலேன் எம் ஈசனே ! ‖ **90** ‖

பண் உலாவு மென் மொழிப் ⋆
படைத் தடம் கணாள் பொருட்டு ⋆
எண் இலா அரக்கரை ⋆
நெருப்பினால் நெருக்கினாய் ⋆
கண் அலால் ஓர் கண் இலேன் ⋆
கலந்த சுற்றம் மற்றிலேன் ⋆
எண் இலாத மாய ! நின்னை ⋆
என்னுள் நீக்கல் என்றுமே ‖ **91** ‖

விடைக் குலங்கள் ஏழ் அடர்த்து ⋆
வென்றி வேற்கண் மாதரார் ⋆
கடிக் கலந்த தோள் புணர்ந்த ⋆
காலி ஆய ! வேலை நீர் ⋆
படைத்தடைத்ததில் கிடந்து ⋆
முன் கடைந்து நின் தனக்கு ⋆

அடைக்கலம் புகுந்த என்னை ⋆
அஞ்சல் என்ன வேண்டுமே ॥ **92** ॥

சுரும்பரங்கு தண் துழாய் ⋆
துதைந்தலர்ந்த பாதமே ⋆
விரும்பி நின்றிறைஞ்சு வேற்கு ⋆
இரங்கரங்க வாணனே ⋆
கரும்பிருந்த கட்டியே ! ⋆
கடல் கிடந்த கண்ணனே ⋆
இரும்பரங்க வெம் சரம் ⋆
துரந்த வில் இராமனே ! ॥ **93** ॥

ஊனில் மேய ஆவி நீ ⋆
உறக்கமோடுணர்ச்சி நீ ⋆
ஆனில் மேய ஐந்தும் நீ ⋆
அவற்றுள் நின்ற தூய்மை நீ ⋆
வானினோடு மண்ணும் நீ ⋆
வளம் கடல் பயனும் நீ ⋆
யானும் நீ அதன்றி ⋆
எம்பிரானும் நீ இராமனே ! ॥ **94** ॥

அடக்கரும் புலன்கள் ஐந்தடக்கி ⋆
ஆசையாம் அவை ⋆
தொடக்கறுத்து வந்து ⋆
நின் தொழிற்கண் நின்ற என்னை நீ ⋆
விடக் கருதி மெய் செயாது ⋆
மிக்கோர் ஆசை ஆக்கிலும் ⋆

கடற்கிடந்த நின் அலால் ⋆
ஓர் கண் இலேன் எம் அண்ணலே ! ‖ **95** ‖

வரம்பிலாத மாய ! மாய ! ⋆
வையம் ஏழும் மெய்ம்மையே ⋆
வரம்பில் ஊழி ஏத்திலும் ⋆
வரம்பிலாத கீர்த்தியாய் ⋆
வரம்பிலாத பல் பிறப்பு ⋆
அறுத்து வந்து நின் கழல் ⋆
பொருந்துமா திருந்த நீ ⋆
வரம் செய் புண்டரீகனே ! ‖ **96** ‖

வெய்ய ஆழி சங்கு தண்டு ⋆
வில்லும் வாளும் ஏந்து சீர்க் கைய ⋆
செய்ய போதில் மாது சேரும் ⋆
மார்ப நாதனே ⋆
ஐயில் ஆய ஆக்கை நோய் ⋆
அறுத்து வந்து நின் அடைந்து ⋆
உய்வதோர் உபாயம் நீ ⋆
எனக்கு நல்க வேண்டுமே ‖ **97** ‖

மறம் துறந்து வஞ்சமாற்றி ⋆
ஐம் புலன்கள் ஆசையும் துறந்து ⋆
நின் கண் ஆசையே ⋆
தொடர்ந்து நின்ற நாயினேன் ⋆
பிறந்திறந்து பேர் இடர்ச் ⋆
சுழிக்கணின்று நீங்குமா ⋆

மறந்திடாது மற்றெனக்கு ⋆
மாய ! நல்க வேண்டுமே ॥ **98** ॥

காட்டினான் செய் வல் வினை ⋆
பயன் தனால் மனந்தனை ⋆
நாட்டி வைத்து நல்ல அல்ல ⋆
செய்ய எண்ணினார் எனக் ⋆
கேட்டதன்றி என்னதாவி ⋆
பின்னை கேள்வ ! நின்னொடும் ⋆
பூட்டி வைத்த என்னை ⋆
நின்னுள் நீக்கல் பூவை வண்ணனே ! ॥ **99** ॥

பிறப்பினோடு பேர் இடர்ச் ⋆
சுழிக்கண் நின்றும் நீங்கும் அஃது ⋆
இறப்ப வைத்த ஞான நீசரைக் ⋆
கரைக் கொடேற்றுமா ⋆
பெறற்கரிய நின்ன பாத ⋆
பத்தி ஆன பாசனம் ⋆
பிறற்கரிய மாயனே ! ⋆
எனக்கு நல்க வேண்டுமே ॥ **100** ॥

‡ இரந்துரைப்பதுண்டு வாழி ⋆
ஏம நீர் நிறத்தமா ⋆
வரம் தரும் திருக்குறிப்பில் ⋆
வைத்ததாகில் மன்னு சீர் ⋆
பரந்த சிந்தை ஒன்றி நின்று ⋆
நின்ன பாத பங்கயம் ⋆

நிரந்தரம் நினைப்பதாக ⋆
நீ நினைக்க வேண்டுமே ‖ **101** ‖

விள்விலாத காதலால் ⋆
விளங்கு பாத போதில் வைத்து ⋆
உள்ளு வேனதூன நோய் ⋆
ஒழிக்குமா தெழிக்கு நீர் ⋆
பள்ளி மாய பன்றி ஆய ⋆
வென்றி வீர ⋆
குன்றினால் துள்ளுநீர் வரம்பு செய்த ⋆
தோன்றல் ஒன்று சொல்லிடே ‖ **102** ‖

திருக் கலந்து சேரு மார்ப ! ⋆
தேவ தேவ தேவனே ⋆
இருக் கலந்த வேத நீதி ⋆
ஆகி நின்ற நின்மலா ⋆
கருக் கலந்த காளமேக ⋆
மேனி ஆய நின் பெயர் ⋆
உருக் கலந்தொழிவிலாது ⋆
உரைக்கும் ஆறுரை செயே ‖ **103** ‖

கடுங்கவந்தன் வக்கரன் ⋆
கரன் முரன் சிரம் அவை ⋆
இடந்து கூறு செய்த ⋆
பல் படைத் தடக்கை மாயனே ⋆
கிடந்திருந்து நின்றியங்கு போதும் ⋆
நின்ன பொற்கழல் ⋆

தொடர்ந்து விள்விலாததோர் ⋆
தொடர்ச்சி நல்க வேண்டுமே ‖ **104** ‖

மண்ணை உண்டுமிழ்ந்து ⋆
பின் இரந்து கொண்டளந்து ⋆
மண் கண்ணுள் அல்லதில்லை என்று ⋆
வென்ற காலம் ஆயினாய் ⋆
பண்ணை வென்ற இன் சொல் மங்கை ⋆
கொங்கை தங்கு பங்கயக் கண்ண ⋆
நின்ன வண்ணம் அல்லதில்லை ⋆
எண்ணும் வண்ணமே ‖ **105** ‖

கறுத்தெதிர்ந்த காலநேமி ⋆
காலனோடு கூட ⋆
அன்றறுத்த ஆழி சங்கு தண்டு ⋆
வில்லும் வாளும் ஏந்தினாய் ⋆
தொறுக் கலந்த ஊனம் அஃது ⋆
ஒழிக்க அன்று குன்றம் முன் ⋆
பொறுத்த நின் புகழ்க்கலால் ⋆
ஓர் நேசம் இல்லை நெஞ்சமே ! ‖ **106** ‖

காய் சினத்த காசி மன்னன் ⋆
வக்கரன் பவுண்டிரன் ⋆
மாசினத்த மாலி மான் ⋆
சுமாலி கேசி தேனுகன் ⋆
நாசம் உற்று வீழ நாள் ⋆
கவர்ந்த நின் கழற்கலால் ⋆

நேச பாசம் எத்திறத்தும் ⋆
வைத்திடேன் எம் ஈசனே ! ॥ **107** ॥

கேடில் சீர் வரத்தனாய்க் ⋆
கெடும் வரத்தயன் அரன் ⋆
நாடினோடு நாட்டம் ஆயிரத்தன் ⋆
நாடு நண்ணினும் ⋆
வீடதான போகம் எய்தி ⋆
வீற்றிருந்த போதிலும் ⋆
கூடும் ஆசை அல்லதொன்று ⋆
கொள்வனோ குறிப்பிலே ॥ **108** ॥

சுருக்கு வாரை இன்றியே ⋆
சுருங்கினாய் சுருங்கியும் ⋆
பெருக்கு வாரை இன்றியே ⋆
பெருக்க மெய்து பெற்றியோய் ⋆
செருக்குவார்கள் தீக் குணங்கள் ⋆
தீர்த்த தேவ தேவன் என்று ⋆
இருக்கு வாய் முனிக் கணங்கள் ஏத்த ⋆
யானும் ஏத்தினேன் ॥ **109** ॥

தூயன் ஆயும் அன்றியும் ⋆
சுரும்புலாவு தண் துழாய் ⋆
மாய ! நின்னை நாயினேன் ⋆
வணங்கி வாழ்த்தும் ஈதெலாம் ⋆
நீயும் நின் குறிப்பினில் ⋆
பொறுத்து நல்கு வேலை நீர் ⋆

பாயலோடு பத்தர் சித்தம் ⋆
மேய வேலை வண்ணனே ! ॥ **110** ॥

வைது நின்னை வல்லவா ⋆
பழித்தவர்க்கும் மாறில் போர் ⋆
செய்து நின்ன செற்ற தீயில் ⋆
வெந்தவர்க்கும் வந்துன்னை ⋆
எய்தல் ஆகும் என்பர் ஆதலால் ⋆
எம் மாய ! நாயினேன் ⋆
செய்த குற்றம் நற்றம் ஆகவே கொள் ⋆
ஞால நாதனே ! ॥ **111** ॥

வாள்கள் ஆகி நாள்கள் செல்ல ⋆
நோய்மை குன்றி மூப்பெய்தி ⋆
மாளுநாள் அதாதலால் ⋆
வணங்கி வாழ்த்தென் நெஞ்சமே ⋆
ஆளதாகும் நன்மை என்று ⋆
நன்குணர்ந்ததன்றியும் ⋆
மீள்விலாத போகம் நல்க வேண்டும் ⋆
மால பாதமே ॥ **112** ॥

சலம் கலந்த செம் சடைக் ⋆
கறுத்த கண்டன் வெண் தலைப் ⋆
புலன் கலங்க உண்ட பாதகத்தன் ⋆
வன் துயர் கெட ⋆
அலங்கல் மார்வில் வாச நீர் ⋆
கொடுத்தவன் அடுத்த சீர் ⋆

நலம் கொள் மாலை நண்ணும் வண்ணம் ⋆
எண்ணு வாழி நெஞ்சமே ! ‖ **113** ‖

ஈனமாய எட்டும் நீக்கி ⋆
ஏதம் இன்றி மீது போய் ⋆
வானம் ஆள வல்லை ஏல் ⋆
வணங்கி வாழ்த்தென் நெஞ்சமே ⋆
ஞானம் ஆகி ஞாயிறாகி ⋆
ஞால முற்றும் ஓர் எயிற்று ⋆
ஏனமாய் இடந்த மூர்த்தி ⋆
எந்தை பாதம் எண்ணியே ‖ **114** ‖

‡ அத்தன் ஆகி அன்னை ஆகி ⋆
ஆளும் எம் பிரானும் ஆய் ⋆
ஒத்தொவ்வாத பல் பிறப்பொழித்து ⋆
நம்மை ஆட்கொள்வான் ⋆
முத்தனார் முகுந்தனார் ⋆
புகுந்து நம்முள் மேவினார் ⋆
எத்தினால் இடர்க்கடல் கிடத்தி ⋆
ஏழை நெஞ்சமே ‖ **115** ‖

மாறு செய்த வாள் அரக்கன் ⋆
நாள் உலப்ப ⋆
அன்றிலங்கை நீறு செய்து சென்று கொன்று ⋆
வென்றி கொண்ட வீரனார் ⋆
வேறு செய்து தம்முள் என்னை ⋆
வைத்திடாமையால் ⋆

நமன் கூறு செய்து கொண்டிறந்த ⋆
குற்றம் எண்ண வல்லனே ‖ **116** ‖

அச்சம் நோயொடல்லல் ⋆
பல் பிறப்பவாய மூப்பிவை ⋆
வைத்த சிந்தை வைத்த ஆக்கை ⋆
மாற்றி வானில் ஏற்றுவான் ⋆
அச்சுதன் அநந்த கீர்த்தி ⋆
ஆதி அந்தம் இல்லவன் ⋆
நச்சு நாகணைக் கிடந்த ⋆
நாதன் வேத கீதனே ‖ **117** ‖

சொல்லினும் தொழிற்கணும் ⋆
தொடக்கறாத அன்பினும் ⋆
அல்லும் நன் பகலினோடும் ⋆
ஆன மாலை காலையும் ⋆
வல்லி நாண்மலர்க் கிழத்தி ⋆
நாத ! பாத போதினைப் ⋆
புல்லி உள்ளம் விள்விலாது ⋆
பூண்டு மீண்டதில்லையே ‖ **118** ‖

‡ பொன்னி சூழ் அரங்கமேய ⋆
பூவை வண்ண ! மாய ! கேள் ⋆
என்னதாவி என்னும் ⋆
வல் வினையினுள் கொழுந்தெழுந்து ⋆
உன்ன பாதம் என்ன நின்ற ⋆
ஒண் சுடர்க் கொழுமலர் ⋆

மன்ன வந்து பூண்டு ⋆
வாட்டம் இன்றி எங்கும் நின்றதே ॥ **119** ॥

‡ இயக்கறாத பல் பிறப்பில் ⋆
என்னை மாற்றி இன்று வந்து ⋆
உயக்கொள் மேக வண்ணன் நண்ணி ⋆
என் நிலாய தன்னுளே ⋆
மயக்கினான் தன் மன்னு சோதி ⋆
ஆதலால் என் ஆவி தான் ⋆
இயக்கெலாம் அறுத்து ⋆
அறாத இன்ப வீடு பெற்றதே ॥ **120** ॥

அடிவரவு — பூ ஆறு ஐந்து மூன்று நின்று நாகம் ஒன்று ஆதி தாது தன்னுள் சொல் உலகு இன்னை தூய்மை அங்கம் தலை ஏக விடத்த புள் கூசம் அரங்கன் பண்டு வானிறத்து கங்கை வரத்தினில் ஆண் விண் படை பரத்தில் வானகம் கால குரக்கு மின் ஆதி அம்பு ஆடகத்த காய்த்த கடம் வெற்பு ஆனை ஆயன் வேறு வெஞ்சின பால் மண் தோடு கார் குன்று கொண்டை வெண்டிரை சரம் பொற்றை மோடி இலை மன்னு இலங்கை சங்கு மரம் சாலி செழு நடந்த கரண்டம் நன்று நின்றது நிற்பது இன்று சண்ட முத்திறம் காணிலும் குந்தம் வண்டு போதில் மரம் அறிந்து ஒன்றி புன்பல எட்டு சோர்வு பத்தின் வாசி கடை எத்திறம் மட்டு பின் நச்சரா சாடு நெற்றி வெள்ளை பார் குலம் பண் விடை சுரும்பு ஊன் அடக்கு வரம்பு வெய்ய மறம் காட்டினான் பிறப்பு இரந்து விள் திரு கடும் மண்ணை கறுத்து காய் கேடு சுருக்கு தூயன் வைது வாள் சலம் ஈனம் அத்தன் மாறு அச்சம் சொல் பொன்னி இயக்கறாத காவல்

திருச்சந்தவிருத்தம் முற்றிற்று

திருமழிசைப்பிரான் திருவடிகளே சரணம்